1983 பிப்ரவரி 5]

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு துண்டிப்பு பற்றி ஒரு தந்தி வந்து இருக்கிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் இப்போது வேண்டாம் வினாஎண்142

1982 ஜூன் மாதம் முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ள மின்கட்டண விகிதங்கள்.

*வினா எண்.142— திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1982 ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஆ) வீடுகளில்,வியாபார ஸ்தலங்களில், காரியாலயங்களில் விளக்கெரிக்க கட்டண உயர்வு எவ்வளவு? தொழிற்சாலைகளில் எவ்வளவு?

(இ) இக்கட்டண உயர்வால் மின் வாரியத்திற்கு வருடத்தில் எவ்வளவு அதிக வருமானம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. க.இராமச்சந்திரன்: (அ) 1982 மே மாதம் முதல் தேதியிலிருந்து சில வகை பயனீட்டாளர்களுக்கு மின் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டது.

(ஆ) வீடுகளுக்கு மின்கட்டண உயர்வு இல்லை. வியாபார ஸ்தலங்கள், காரியாலயங்கள் முதலியவைகளுக்கு விளக்கெரிக்க 4 காசுகள் உயர்வு.

உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு உச்சத் தேவையில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5-ம் யூனிட் கட்டணத்தில் 5 முதல் 20 காசுகள் வரையிலும் குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கு யூனிட் கட்டணத்தில் 14 காசுகளும் உயர்வாகும்.

(இ) இக்கட்டண உயர்வால் மின் வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 57 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

திரு. கு. ரமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டினால் சிறு தொழில்கள் மிகவும் மோசமான நிலைக்கு வந்து அன்றாடம் தொழில் நடைபெறாமல் நடைமுறையில் பாங்கியிலிருந்து கடன் வாங்க முடியாது அழிந்து போகக்கூடிய நிலைமை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு கட்டண உயர்வு போன முறை 14 காசு என்று உயர்த்தியதைக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்வுகளின் அடிப்படையில் இந்த 14 காசு உயர்வு குறைவு அழுத்த மின்சாரத்திற்கு அதிகப்படுத்தியிருப்பதை தற்போது ஏற்பட்டுள்ள மின்பற்றாக் குறையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. கடந்த 4 ஆண்டு காலமாக எந்தவித மின் வெட்டுக்கும் அவர்கள் ஆளாகவில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மறுபடியும் அரசினுடைய ஆலோசனையில் மின் கட்டணத்தை உயர்த்துவது என்ற நிலை இருந்து வருவதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். இந்தநிலை கைவிடப்பட்டு சாதாரண வீடுகளுக்கும், சிறுகடைகள் டெய்லரிங் கடைகள், சைக்கிள் ரிப்பேர் கடைகள் இந்த இடங்களுக்கு எல்லாம் கூட அதிகப்படியான கட்டணத்தை வைத்திருக்கிறார்கள்—சிறு தொழில்கள் இவைகளுக்கு எல்லாம் மின்சாரக் கட்டணத்தை மேலும் உயர்த்த மாட்டோம் என்று அமைச்சர் அவர்கள் உறுதிமொழி தருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே உயர்த்தியதில்கூட வீடுகளுக்குக் கிடையாது விவசாயத்திற்குக் கிடையாது, காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ்க்கும் கிடையாது. ஏற்கெனவே உயர்த்தியதில் இவைகளுக்கு இப்போது உயர்வு கிடையாது. இனிமேல் உயர்த்தப்படும்போது என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது வீடுகளுக்கு மின்கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் வழக்கறிஞர்கள், டாக்டர்கள் போன்றவர்கள் தங்களுடைய வீடுகளிலே தொழில்களை நடத்திக்கொண்டிருப்பார்களானால் அவர்களுக்கு மின்கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியிருந்தால் அது தவிர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வீடுகளுக்கு உயர்த்தப்படவில்லை என்று சொன்னேன். தொழில்களுக்கு அல்ல.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் பெரிய மாளிகைகளில் 'ஆல் பர்ப்பஸ்' என்ற முறையிலே பயன்படுத்தப்படுகின்ற மோட்டார்களுக்கும் மின்விளக்குகளுக்கும் பல்வேறு காரியங்களுக்கும் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு குறைந்த கட்டணத்தைத்தான் கட்டுகிறார்கள். ஆகவே தரம் பார்த்து அதிகக் கட்டணம் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏகபோகத்தொழில்கள், பெருந்தொழில்கள் என்று வரிசைப்படுத்தி அவர்களுக்கு கட்டணத்தை ஏற்றி சாதாரண மக்களுக்கு ஏற்றாமல் இருக்கின்ற நடைமுறையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

1983 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முன்பு மாளிகைவாசிகளுக்கு மலிவுக் கட்டணம் இருந்தது இப்போது அறவே ரத்துசெய்யப்பட்டுவிட்டது. பெரும் தொழில் களுக்கு சலுகைகள் தற்போது அறவே ரத்து செய்யப்பட்டுள்ளது.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். குறைந்த பட்சம் சிறு தொழில்கள்—10,15 எச். பி. மோட்டார்களை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், கடன் வாங்கி தொழிலை நடத்தக் கூடியவர்கள்—நடத்தக்கூடியவர்களுக்கு எல்லாம் இப்போது உயர்த்தவேண்டுமென்று சொல்லப்படுகிற கட்டணத்திலிருந்து அரசு விதிவிலக்கு அளிக்குமா? பெரிய தொழில்களுக்கு உயர்த்து வதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இனி முடிவு எடுக்கப் போகிறோம் என்பதை இப்போதே எப்படித் தெரிவிக்க முடியும்?

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, மின்வாரியத்தில் இதுவரை ஆண்டுவாரியாக எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது? இந்த மின்கட்டண உயர்வால் மட்டுமே அதை ஈடுகட்டிவிட முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்வாரியம் பேரிழப்புக்கு ஆளாகியிருக்கிறது. மின்கட்டண உயர்வினால் அதை ஈடுகட்டிவிட முடியும் என்று அரசு கருத வில்லை. ஏனென்றால் மின்வாரியத்திற்காக வாங்கப்படுகிற பல பொருட்களின் விலை மத்திய அரசால் மிகப் பெரிய அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வழக்கறி ஞர்கள், டாக்டர்கள் தனியாக கன்சல்டிங் ரூம் வைத்திருந்தால் அவைகளுக்கு மின் கட்டணம் உயர்த்துவதில் அர்த்தம் இருக் கிறது. ஆனால் வக்கீல்கள், டாக்டர்கள் என்று வீடுகளிலே போர்டுகளைப் போட்டுக் கொண்டிருக்கின்றவர்களுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறதே, அதைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தொழில் அலுவலகங்கள் என்ற முறையில் அவை வருமென்று கருதுகிறேன். ஏனென்றால் ''டொமஸ்டிக் பர்ப்பஸ்'' என்பதற்கு உண்டு. இதுபோன்ற அலுவலகங்கள் வைத்திருப்பார்கள் என்றால் ஆபீஸ் என்ற நிலை வந்துவிடுகிறது, ஆகவே கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.